வேலூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.368/அ1/202, நாள் 30.01.2023

- - -

பொருள் : கல்வி - வேலூர் மாவட்டம் - 01.02.2023 மற்றும் 02.02.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகைபுரிதல் - குறித்து

பார்வை : வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.415/ஆ5/2022, நாள் 30.01.2023

- - -

வேலூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01.02.2023 மற்றும் 02.02.2023 ஆகிய இரண்டு நாட்கள் வருகைதர உள்ளார். மேலும், கல்வித்துறை சார்ந்த உயர் அலுவலர் பெருமக்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகள் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளை பார்வையிட உள்ளதால் அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள் அவரவர் பள்ளிகளை அனைத்துவகையிலும் மிகவும் நல்ல முறையில் செயல்படவும் மாவட்டத்திற்கு நற்பெயரை ஈட்டித்தரவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1) மேற்குறிப்பிட்ட நாட்களில் அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எவ்வித விடுப்பும் எடுக்காமல் பள்ளிக்கு வருகைபுரிய வேண்டும்.
2) சம்மந்தப்பட்ட பள்ளி வளாகங்கள் தூய்மையாக இருக்க பள்ளித் தலைமையாசிரியர்கள் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
3) பள்ளி வகுப்பறைகள் கழிப்பறைகள் தூய்மையாக பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4) பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
5) பள்ளிகளில் பார்வையிடும் அலுவலர்களால் கோரப்படும் விவரங்களை சரியான முறையில் தெரிவிக்கவும், தொடர்புடைய ஆவணங்கள முன்னிலை படுத்தவும் தயார் நிலையில் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
6) பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் நலதிட்டங்கள் சார்பான பதிவேடுகள் அனைத்தும் நாளது வரையில் சரி செய்து முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு பள்ளிகளை பார்வையிடவரும் உயர் அலுவலர்களுக்கு உரிய முறையில் அனைத்து ஏற்பாடுகள் செய்யவும் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக்கல்வி
அலுவலர்,
(இடைநிலை)

வேலூர்.

பெறுநர்
அனைத்துவகை  உயர் மற்றும்
மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.